செ.வெ.எண்-15 நாள்-07.03.2021

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021இன்போது வாக்காளர்கள் அனைவருக்கும் புகைப்பட வாக்காளர் சீட்டுக்கு (பூத் சிலிப்) பதிலாக வாக்காளர் தகவல் சீட்டு வழங்க தலைமை தேர்தல் அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதன்படி, ஏப்ரல் 6 அன்று நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுதேர்தலுக்காக வாக்காளர்கள் அனைவருக்கும் வாக்காளர் தகவல் சீட்டு வழங்கப்படவுள்ளது.

வாக்காளர் தகவல் சீட்டில் வாக்குச்சாவடி விபரம், வாக்குபதிவு நாள், வாக்குபதிவு நேரம் ஆகிய விவரங்கள் இடம் பெற்றிருக்கும். வாக்குப்பதிவு நாளான 06.04.2021 அன்றைய தினத்திற்கு 5 நாட்களுக்கு முன்னர் வாக்காளர் தகவல் சீட்டு அனைத்து வாக்காளர்களுக்கும் வழங்கப்பட்டுவிடும். சட்டமன்ற பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு வாக்காளர் தகவல் சீட்டு மட்டுமே போதுமான ஆவணம் அல்ல. வாக்காளர் அடையாள அட்டை அல்லது தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட Passport - கடவுச் சீட்டு, Driving License - ஓட்டுனர் உரிமம், Service Identity Cards with photograph issued to employees by Central / State/ Govt. / PSUs / Public limited companies - மத்திய மாநில அரசால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணியாளர் அடையாள அட்டை, Passbooks with photograph issued by Bank / Post Office-வங்கி அல்லது அஞ்சலக மேலாளரால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய வங்கிகணக்கு புத்தகம், PanCard - பான் கார்டு, Smart Card issued by RGI under NPR–மக்கள் தொகை கணக்கெடுப்பில் வழங்கப்பட்ட நேர்த்தி அட்டை. MGNREGA Job Card - மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் வழங்கப்பட்ட அடையாள அட்டை, Health Insurance Smart Card issued under the scheme of Ministry of Labour - மருத்துவ காப்பீட்டு அட்டை, Pension Document with Photograph - புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், Official Identity Cards issued to MPs / MLAs / MLCs - பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை, Aadhaar Card - ஆதார் அட்டை போன்ற 11 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை வாக்குச்சாவடியில் காண்பித்து வாக்குபதிவு செய்யலாம்.

ஆகவே, வாக்காளர் தகவல் சீட்டுடன், மேற்காணும் 11 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை வாக்குச்சாவடியில் காண்பித்து வாக்குப்பதிவு செய்யலாம் என அரியலூர் வாக்காளர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**